1990 ஏப்ரல் 10]

நாமக்கல்லில் புறவழித் திட்டம்.

*6734—திரு. வீ. பெ. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல்லில் புறவழித் திட்டம் எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

நாமக்கல்லில் புறவழிச்சாலை அமைக்கும் பணி மத்திய சாலை நிதித் திட்டத்தில் (C.R.F.) சேர்ப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, நாமக்கல் நகரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த நெடுஞ் சாலை கன்னியாகுமரியையும், பெங்களூரையும் இணைக்கிற சாலையாக இருக்கிறது. நாமக்கல் நகரத்தில் மட்டும் 4,000 லாரிகள் இருக்கின்றன. நகரத்தில் போக்குவரத்துப் பிரச்சினை என்பது ஒரு பெரும் பிரச்சினையாகி இருப்பதாலும் சாலை விபத்துகள் நிறைய நடப்பதாலும், அங்கே வசிக்கிற மக்களுடைய மாமூல் வாழ்க்கை கெடுகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி விரைவில் அந்த புறவழிச்சாலை அமைய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டுதான் நாமக்கல்லுக்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று இந்த அரசு நினைத்து, அதற்காக உத்தேச மான ஒரு மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டுமென்று முற் பட்டது. அத்தகைய புறவழிச்சாலை அமைக்க 343 லட்சம் உத்தேசமாக செலவாகும் என்று கணித்து அந்த முடிவை 23—3—1989 அன்று மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசிலிருந்து அது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவு தெரிவிக்கப்பட்டவுடன், மேற்கொண்டு இந்த அரசு அந்தப் பாதையை அமைக்க ஆவன செய்யும்.

திரு. வீ. பெ. துரைசாமி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவர் அவர்களே, அந்தப்பகுதி மக்க ளுடைய நீண்டகால கோரிக்கையாக அது இருக்கிறது. லாரி

உரிமையாளர்களுடைய, அந்தச் சங்கத்தினுடைய நீண்டகால கோரிக்கையாகவும் அது இருப்பதால், அதனை அவசர, அத்தியா வசிய கோரிக்கையாக அரசு ஏற்று, இதனை ஒரு ஸ்பெஷல் கேசாக ட்ரீட் செய்து, மத்திய அரசை வலியுறுத்தி, விரைவில் இந்தப் புறவழிச்சாலை அமைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அரசு விரைந்து இந்தச் சாலையை அமைக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

பாளயங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 5040—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

* 6480—திருமதி பாப்பா உமாநாத் :

திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் செயல்பட்டுவரும் மகளிர் மேம்பாட்டு கழகத்தின் தொழில் துறைகளில் பணிபுரியும் பெண்களின் ஊதியத்தை உயர்த்திட அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி. பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள அச்சகம், சிவகாசியில் உள்ள அச்சகம் ஆகியவற்றில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு குறைந்த